**வடக்கு அதிவேகப் பாதைச் செயற்திட்டம் - 2013**

வடக்கு அதிவேகப் பாதைச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய நெடுஞ்சாலைகள் உயர்கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன முறையே அமுலாக்கல் மற்றும் நிறைவேற்றல் முகவராக உள்ளது. கொழும்பு மற்றும் கண்டியை இணைக்கும் முடிவாக தேசிய அதிவேகப்பாதை வலையமைப்பின் பகுதியாக முன் மாதிரியாக இருந்த வடக்கு அதிவேகப்பாதையினை நிர்மாணிப்பதே வடக்கு அதிவேகப்பாதை செயற்திட்டத்தின் குறிக்கோளாகவுள்ளது. உத்தேசிக்கப்பட்ட கண்டி அதிவேகப் பாதைக்கு புறம்பான ஒரு பகுதியுடன் கொழும்பு முதல் தம்புள்ள வரை நீடிப்பதில் 191 கிலோ மீற்றர்கள் அதிவேகப்பாதையை நிர்மாணிப்பதற்கு 10 பொதிகளைக் இச் செயற்திட்டத்தின் முதலாவது பகுதி கொண்டுள்ளது. வெளிநாட்டு உதவியின் கீழான செயற்திட்டத்தின் நிதி ஒழுங்கமைப்புக்கள் மற்றும் செயற்திட்டக் காலப்பகுதி 2013 திசெம்பர் 31 வரையும் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களை தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டினையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், அரசாங்க நிதிகளிலிருந்து உருவான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றைக் காட்டும் வண்ணம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய கணக்கீட்டு பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) நிதிகளின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்ட அமுலாகக்ப்படுதலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இணங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிரயாம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களிற்கேற்ப 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 1,182,299,612 ஆகவிருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினத்தின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின விடயம் | 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் ரூபா |
| --- | --- |
| நிலையான சொத்துக்கள் | 995,301 |
| நடைபெறும் வேலைகள் | 1,181,304,310 |
| மொத்தம் | 1,182,299,612 |

## 5. நிதி மற்றும் செயலாற்றல் மீளாய்வு

### நிதிகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதியளிப்பு பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு காலப்பகுதிக்கான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய புள்ளி விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| இலங்கை அரசாங்கம் | 980 | 734.8 | 734.8 |
| மொத்தம் | 980 | *734.8 | *734.8 |

* ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டியவைகள் உள்ளடக்கப்படாமையால் இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து இந்த தொகை வேறுபடுகின்றது.

### 5.2 ஒப்பந்த நிர்வாகம்

வடக்கு அதிவேகப் பாதை செயற்திட்டத்தின் கட்டம் 1 இணை பிரேரிப்பதற்கான அக்கறை மற்றும் வேண்டுகையின் வெளிப்பாட்டை வரவேற்பதற்கு சாத்தியவளக் அறிக்கை, சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் ஆவணத்தின் தயாரிப்பு என்பவற்றினை மேற்கொள்வதற்கான ஆலோசனை சேவைகளிற்காக வெளிநாட்டு ஒப்பந்தக்காரர் நேரடி ஒப்பந்த முறையின் கீழ் தெரிவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2012 திசெம்பர் 19 இல் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சரவையின் அங்கீகாரம் வெளிநாட்டு கூறுகளிற்காக ரூபா 552,216,465 இற்கு சமமான அவுஸ்ரேலியா டொலர் 3,998,671 ஆன மற்றும் உள்ளூர் கூறுகளிற்காக ரூபா 414,233,734 என்பன கிரயத்தில் ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தம் வழங்குவதற்கு தீர்மானம் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பொருளாதாரம், சுற்றாடல், சமூக விடயங்கள், ஒட்டு மொத்த செயற்திட்ட திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் என்பன தொடர்பில் செயற்திட்டத்தின் சாத்தியவள கற்கைகள் 2013 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.